# விஷ்ணு குப்தர்-57

30.11.2014

## இலங்கையில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு, விஷ்ணு குப்தர்- 58, 2015 ஆம் ஆண்டு ஜனவரி 18ஆம் திகதியே வெளியிடப்படும்.

1. Thambimuttu, Colombo, Sri Lanka

**கேள்வி:** எதிரணியின் பொது வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்ட மைத்திரிபால சிரிசேன தானே தொடர்ந்தும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் என்று கூறியதன் அர்த்தம் என்ன?

**பதில்:** அவரைக் கட்சியின் செயலாளர் பதவியில் இருந்து நீக்குவதற்கு சட்டபூர்வமான நடைமுறைகளைக் கையாள வேண்டும். அவ்வாறு ஜனாதிபதியோடு நிற்கும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் செய்யவில்லை.

2. Rajapandiyan, Singapore

**கேள்வி:** மலையக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் ஏ. லோரன்ஸ் தமது கட்சி மகிந்த ராஜபக்சவின் அரசாங்கத்திற்குக் கொடுக்கும் ஆதரவை மீள்பரிசீலிக்கப் போவதாகக் கூறியதன் அர்த்தம் என்ன?

**பதில்:** மலையக மக்கள் முன்னணி தாம் பிரதிநிதித்துவப் படுத்தும் மலையக மக்களின் நலனைக் கருத்தில் கொண்டுதான் எந்த முடிவையும் எடுக்கும் என்று நம்பலாம்.

3. Gowrimukunthan, Trincomalee, Sri Lanka

**கேள்வி:** யுத்த காலத்தில் உயிர் நீத்த உறவுகளை நினைவு கூருவதைத் தடைசெய்வது சர்வாதிகாரத்தின் அடையாளம் என்று வட மாகாண சபையின் தமிழ்த் தேசியக் கூட்டணி உறுப்பினரான அனந்தி கூறியிருப்பது முறையா?

**பதில்:** இறந்தவர்களை நினைவு கூருவதைத் தடை செய்வது சர்வாதிகாரத்தின் அறிகுறி என்பது உண்மைதான். ஆனால் அவ்வாறு கூறுவதற்கு அனந்திக்கு எவ்வித அருகதையும் கிடையாது.

அவருடைய கணவர் எழிலன் ஒரு புலி முக்கியஸ்தர். புலிகளின் சர்வாதிகாரப் போக்கே தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், வி. யோகேஸ்வரன், ஜோசப் பரராஜசிங்கம், கலாநிதி நீலன் திருச்செல்வம் முதலிய மிதவாதிகள் மட்டுமல்லாது கடைசி யுத்தத்தில் பல அப்பாவித் தமிழர்களும் கொலை செய்யப்படுவதற்குக் காரணம். அனந்தியின் கணவர் அப்பாவித் தமிழர்களின் கொலைகளை முன்னின்று செய்தவர்.

### 4. Apsara, Newcastle, UK

**கேள்வி:** கல்முனை மேயர் நிசாம் காரியப்பரின் செயற்பாடுகள் கல்முனையில் தமிழர்களின் இருப்பு, அபிவிருத்தி, நலனோம்பு செயற்திட்டங்கள் ஆகியவற்றிற்கு எதிரானவை என்று கல்முனை மாநகர சபையில் உறுப்பினர்களாக இருக்கும் நான்கு தமிழ்த் தேசியக் கூட்டணியினர் கூறியிருப்பது பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:** ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தமிழருக்கெதிரான நிலைப்பாட்டைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்பொழுதுதான் அறிந்து கொண்டிருக்கின்றது என்பது புலப்படுகிறது.

### 5. Krishna, Nallur, Sri Lanka

**கேள்வி:** மூதூரின் பிரதேச செயலாளர் பிரதீபன் இடமாற்றம் செய்யப்பட்டமை பற்றித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர் நாகேஸ்வரன் கண்டனம் தெரிவித்திருக்கிறார். அவருக்குப் பதிலாக ஒரு முஸ்லிம் பிரதேச செயலாளர் நியமிக்கப் படுவதையும் அவர் கண்டித்திருக்கிறார்.

**பதில்:** மூதூருக்கு இன்றைய காலகட்டத்தில் ஒரு முஸ்லிம் பிரதேச செயலாளர் நியமிக்கப்பட்டமை கண்டிக்கப்பட வேண்டிய விடயம்தான். ஆயினும் பிரதீபன் மூதூரில் இருப்பதிலும் பார்க்க முஸ்லிம் ஒருவர் இருப்பது வரவேற்கத் தக்கது. சம்பூர் காளி கோவிலை கடந்த வருடம் செப்தம்பர் மாதத்தில் உடைத்ததற்கு பிரதீபன் முழு உடந்தையாக இருந்தவர் என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிந்து கொள்ள வேண்டும்.

### 6. Jamuna, Jaffna, Sri Lanka

**கேள்வி:** ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்சவையா அல்லது மைத்ரிபால சிரிசேனவையா ஆதரிப்பது பற்றி இருவருடைய தேர்தல் விஞ்ஞாபனங்களும்

வெளி வந்ததும் முடிவு செய்வார்களாம். 18 ஆவது திருத்தற் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆதரவு வழங்கிய முஸ்லிம் காங்கரஸ் இன்னுமா மக்களை எமாற்ற முயல்கிறது?

__*பதில்:*__ ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசும் தமிழ்த் தேசியக் கூட்டணியும் தத்தமது மக்களை எமாற்றுவதில் கில்லாடிகள். 18 ஆவது திருத்தற் சட்டத்தை அப்பொழுது நிறைவேற்ற வாக்களித்ததற்கு மக்கள் நம்பக்கூடிய காரணம் சொல்வதற்குத் தயாராகி வருகிறார்கள் எனத் தெரியவருகிறது.

### 7. Shyamala, Sydney, Australia

__*கேள்வி:*__ இருதலைக் கொள்ளி எறும்பு என்றால் என்ன? ஓர் உதாரணம் தருவீர்களா?

__*பதில்:*__ ஓர் அமைப்பையோ அல்லது நபரையோ இருதலைக் கொள்ளி எறும்பு என்றும் சொல்லலாம், அல்லாவிட்டால் விலாங்கு என்றும் சொல்லலாம். இவற்றிற்கு நல்ல உதாரணம் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கரஸ். அரசாங்கத்திற்கு சிரித்த முகத்தைத் தலைவர் ராஉப் ஹக்கீம் காட்டிக் கொள்வார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அக்கட்சியின் செயலாளர் ஹசன் அலி தனது சிரித்த முகத்தைக் காட்டிக் கொள்வார். ஜனாதிபதியோ இவற்றிற்கெல்லாம் ஏமாற மாட்டார். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் ஏமாறிக் கொண்டே வருகிறது.

### 8. Kundumani, Boston, USA

__*கேள்வி:*__ கிழக்கு மாகாண சபையில் ரிஷாத் பதியுதினின் அகில இலங்கை மக்கள் கட்சியைச் சேர்ந்த மூவர் அரசாங்கக் கட்சியில் இருந்து விலகி சுயேச்சையாக இயங்குகிறார்களாம். இதனால் கிழக்கு மாகாண சபையின் ஸ்திரநிலை பாதிக்கப் படுமா?

__*பதில்:*__ இல்லவே இல்லை. அப்படி நடக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டணியினர் ஆவலோடு காத்திருக்க வேண்டியதில்லை. அரசாங்க தரப்பில் இருந்து சுயேச்சையாக மாறிய மூவருக்கும் தேவையானது அமைச்சர் பதவிகளே. அவர்களுள் ஒருவர் பாராளுமன்ற உறுப்பினர் ஆக்கப் பட்டு துணை அமைச்சராக நியமிக்கப் படுவார். மற்ற இருவருக்கும் வேறு சலுகைகள் கிடைக்கும். எனவே அவர்கள் ராஜபக்சவின் முதலமைச்சரை எதிர்க்க மாட்டார்கள்.

### 9. Rajesh, Kandy, Sri Lanka

**<u>கேள்வி:</u>** ஜாதிக ஹெல உரிமைக் கட்சி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடனான பந்தத்தைத் துண்டித்து விட்டதற்கு என்ன காரணம்?

**<u>பதில்</u>**: இரு கட்சிகள் மத்தியில் இருக்கும் பந்தம் தொடர்ந்தும் இருக்குமானால் சிங்கள் மக்கள் மத்தியில் ஹெல உரிமைக் கட்சி நேர்மையை மதிக்கும் கட்சி என்ற தனது மரியாதையை இழந்துவிடும் என்பதே காரணம்.

### 10. Namukulan, Batticaloa, Sri Lanka

**<u>கேள்வி</u>**: ஐக்கிய ராச்சியத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் குழுவொன்று இலங்கை அரசாங்கம் ஐ.நா. விசாரணைக் குழுவுக்கு ஒத்துழைப்புக் கொடுக்காவிட்டால் இலங்கைக்கு எதிராக ஐரோப்பிய நாடுகள் பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்று சிபாரிசு செய்துள்ளது. அச்சிபாரிசை அந்நாடுகள் நடைமுறைப் படுத்துமா?

**<u>பதில்:</u>** இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நடந்து அத்தேர்தலில் மகிந்த ராஜபக்ச வெற்றிபெற்றால் நிச்சயமாகப் பொருளாதாரத் தடை நடைமுறைப்படுத்தப் படும். ஜனாதிபதியாக மைத்ரிபால சிரிசேன தெரிந்தெடுக்கப் பட்டால் பொருளாதாரத் தடை நடைமுறைக்கு வராது.